

# முட்டைகளின் மர்மம்

## இளம் வாசகர்களுக்கான இயற்கைக் கதைகள்


ஆக்கம்: வித்யா

ராஜாராம் சர்மா

மொழிபெயர்ப்பு: சுரேந்தர் பூபாலன்

செம்மையாக்கம்: த. பரசுராமன்

உதவி: க.ச. அமுதா

சு. மகேஸ்வரி

இரா. நளினி

## *பிற கதைகள்*

மாறுபட்ட இறகுகளுடைய பறவைகள்

பெரியதும் சிறியதும்

உரிமையானவர்களும் தகுதியானவர்களும்

ரகசிய சபதம்


“பாரேன்! சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவியின் முட்டைகள்!”

“யார் அது?” என மறைந்திருந்த பழுப்பு நிறக் குருவி திரும்பிப் பார்த்துக் கேட்டது.

“நான்தான் சொன்னேன்” என்று பணிவாகக் கூறினேன்.

“நீ ஏன் அப்படி நினைக்கிறாய்?” என அக்குருவி கோபமாகக் கேட்டது.

“நான் எதுவும் நினைக்கவில்லை. எனக்குத் தெரியும்” என நான் எதிர்த்துப் பேசினேன்.





“ஆ! நீ உறுதியாகத்தான் சொல்கிறாயா?” என அந்தக் குருவி என்னிடம் அடாவடியாகப் பேசியது. விளையாட்டு மைதானத்தைத் தாண்டிப் போகும்போது தற்செயலாகக் குருவிகளின் முட்டைகள் என் கண்களில் பட்டன. மறுபடியும் முட்டைகளைப் பார்த்ததால் நான் மகிழ்ச்சி அடைந்தேன்.

நான் முதன்முதலாக இதுபோன்ற முட்டைகளைப் பார்த்தபோது ஆச்சரியம் அடைந்தேன் ஆனால், சற்று பயந்து போனேன். அதனால், புதரின் பின்னால் மறைந்து கொண்டேன். நான் முட்டைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே என் சகோதரனும் அங்கு வந்தான். அப்போது, நீண்ட கால்களைக் கொண்ட பெரிய குருவி நடந்து வந்து அம்முட்டைகளின் மேல் உட்கார்ந்தது. “அதுதான் சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவி,” என என் சகோதரன் மெதுவாகச் சொன்னான்.

“இதே போன்ற முட்டைகளை நான் காட்டில் பார்த்திருக்கிறேன்.”

“இதே போன்றா?” என அக்குருவி கேட்டது.

“நீ என்ன சொல்ல வருகிறாய்?” என்று கேட்டேன்.

“இந்த முட்டைகள் என்னுடையவைதான். ஆனால், நான் சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவி இல்லையே!”, என்றது குருவி.

“ஆமா. நீ இல்லைதான். பிறகு, இவை உன்னுடைய முட்டைகள் என்று, ஏன் உரிமை கொண்டாடுகிறாய்? ஏய், திருடி!” என்றேன்.





“உனக்கு எவ்வளவு துணிச்சல் இருந்தால், என்னைத் திருடி என்று சொல்லுவாய்! இப்போதே நிரூபித்துக் காட்டு!” என அக்குருவி உரக்கச் சொன்னது.

“எதை நிரூபிக்க வேண்டும்?” என்றேன் நான்.

“உன்னால் முடிந்தால், இவை என்னுடைய முட்டைகள் இல்லை என உறுதிப்படுத்து,” என்றது குருவி.

“அது, எப்படி?” என்று நான் கேட்டேன்.

“ஹா! ஹா! உறுதியாகத் தெரிந்த பிறகுதான் பழி சொல்ல வேண்டும். ஓடிப் போய் ஒரு வழியைக் கண்டுபிடி,” என்றது குருவி.

“நல்லது, அங்கிருக்கும் முட்டைகளில் ஒன்றை நான் எடுத்து

வருகிறேன். அதைப் பார்த்து நீ உறுதி செய்து கொள்ளலாம்,” என்றேன்.

“நீ அப்படி எதையும் செய்யாதே,” என அக்குருவி பயமுறுத்தியது.

“உனக்கு சொந்தமில்லாத பொருளை எடுக்க, உனக்கு என்ன உரிமை இருக்கிறது?”என்றது குருவி.

குழப்பத்திற்கு ஆளானதை நினைத்து, என்னை நானே நொந்து கொண்டேன்.

“இங்கே பார் குருவியே, நான் நிச்சயமாக இந்த முட்டைகளையோ அந்த முட்டைகளையோ தொட மாட்டேன். ஆனால், இந்தக் குழப்பத்தைக் கண்டிப்பாகப் போக்குவேன். நான் யோசித்து ஒரு வழி சொல்கிறேன். அதுவரை இங்கேயே





இரு,” என்று சொல்லிவிட்டு காட்டுக்குள் சென்றேன்.


அது நகரப் பகுதியில் இருக்கும் காடு. இயற்கையைப் பாதுகாக்கும் வகையில் மிகப்பெரிய பரப்பில் அமைந்திருக்கிறது. இந்தக் காடு நகரத்தில் இருப்பதால், ஆபத்தான விலங்குகள் எதுவும் இல்லை. இது மக்களின் ஓய்விடமாக விளங்குகிறது. எனவே, மக்கள் அவ்விடத்தை நடைப்பயிற்சி செய்யவும் உடற்பயிற்சி செய்யவும் பயன்படுத்துகிறார்கள். இந்தக் காட்டில் சிறிய குளமும் அதற்குப் பக்கத்தில் ஒரு தோட்டமும் இருக்கிறது. மழைக்காலம் முடிந்த பின், குளத்தில் நீர் குறையத் தொடங்கும். குளிர்காலம் முடியும் காலத்தில் மரத்தில் உள்ள இலைகள் உதிர்ந்து, காடே அடர்த்தி குறைந்து இருக்கும். இது கோடைக்காலத்தின் தொடக்கம், ஆய்வு மேற்கொள்ள சரியான

காலம். எனவேதான் கடந்த வார ஆய்வு எங்களை முட்டைகள்வரை கூட்டிச் சென்றது.

அந்த முட்டைகளின் ஒரு பக்கம் கூர்மையாகவும் இன்னொரு பக்கம் உருண்டையாகவும் இருந்தது. அவை பூவின் இதழ்கள் போல் குறுகிய பகுதி நடுவிலும் அகன்ற பகுதி வெளியிலுமாக அடுக்கப்பட்டு இருந்தன. முட்டைகளின் மேல் புள்ளிகளும் வாரி தெளித்தாற் போன்ற கறைகளும் பரவி இருந்தன. கறுத்த, வெளுத்த பழுப்பு நிற அடையாளங்கள் முட்டையின் உருண்டைப் பக்கத்தில் பெரியதாக இருந்தன.

நான் ஒரு குச்சியை எடுத்து முட்டையின் நீளத்துக்கு அதை முறித்தேன். அப்புறம் ஒரு நிபுணர் போல எல்லாக் கோணத்திலிருந்தும் முட்டைகளைப் புகைப்படம் எடுத்தேன். “என்னுடைய கருத்தை உறுதி செய்யும் எல்லா ஆதாரங்களும்





என்னிடம் உள்ளன," என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். வேகவேகமாக விளையாட்டு மைதானத்துக்குத் திரும்பினேன்.

நான் முன்னர் முட்டைகளைப் பார்த்த இடத்திற்கு வந்து முட்டைகளைத் தேடினேன். நான் எவ்வளவு தேடியும் முட்டைகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"ஒரே குழப்பமாக இருக்கிறது!" என்று தலையைச் சொரிந்து கொண்டே சத்தமாகச் சொன்னேன்.

ஏரியில் முட்டையைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிது. ஏனெனில், மரங்களுக்கும் தண்ணீருக்கும் நடுவில் குறுகிய அளவு நிலப்பரப்பே இருக்கிறது. மேலும், மூங்கிலுக்குப் பக்கத்தில் இருக்கும் தாழ்வான மண்மேட்டின் மேல் முட்டைகள்


இருந்தன. அங்கே போவதற்கு எனக்கு வழி தெரியும். ஆனால், மிகப்பெரிய இந்த விளையாட்டு மைதானத்தில் எந்த அடையாளமும் முட்டையைக் கண்டுபிடிக்க எனக்கு உதவி செய்யவில்லை.

“முட்டைகளைத் தேடுகிறாயா?” என்று குருவி பக்கத்தில் நின்றுகொண்டு, வாயைத் திறந்தபடியே கேட்டது.

“வேடிக்கையாக இருக்கிறது. அருகில் இருக்கும் உன்னையும் கவனிக்கவில்லை. முட்டைகளையும் கண்டுபிடிக்க முடியவில்லையே!” என்றேன் நான்.

“ஆமாம். முட்டைகள் எங்கே?” என்று நான் கேட்டேன்.

“அப்படியே கீழே குனிந்து பார்!” என்றது குருவி..





ஆ! நம்ப முடியவில்லை! முட்டைகள் எனக்கு நேரெதிராகத்தான் இருந்தன. ஆனால், நான் அவற்றைப் பார்க்கவில்லை. எங்களின் ஆசிரியர் பச்சோந்திகளைப் பற்றி சொன்னபோது, உருவ மறைப்பு செய்த பச்சோந்தியைக் காட்சிப்படுத்த முயற்சி செய்திருக்கிறேன். உருவ மறைப்புக்குச் சரியான எடுத்துக்காட்டாக அந்த முட்டைகள் இருந்தன.

நான் பெரிதும் குழப்பம் அடைந்தேன். அதிலிருந்து மீள எனக்கு சிறிது நேரம் ஆனது. நான் முன்னர் முட்டையை அளந்து வைத்திருந்த குச்சியை என் சட்டைப் பையிலிருந்து எடுத்து அங்கிருந்த முட்டையின் பக்கத்தில் வைத்தேன். ஆச்சரியமும் குழப்பமும் அதிகமானது.

“அந்த முட்டைகளை விட இவை சிறியவை,” என நான்

மெதுவாகச்.

சொன்னேன். நான் அந்த முட்டைகளையும் என் புகைப்படக் கருவியில் இருக்கும் படங்களையும் உற்றுப் பார்த்தேன். ஏனென்றால், படத்தையும் முட்டைகளையும் அவற்றின் நிறங்களையும் எப்படி ஒப்பிடுவது என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. திடீரென ஒரு யோசனை தோன்றியது. “கோழித்தாடி என்றால் என்ன என்று உன்னால் சொல்ல முடியுமா?” என்று கேட்டேன்.

“சந்தேகமில்லாமல், கோழித்தாடி என்பது சேவற்கோழி போன்ற பறவைகளின் தலை அல்லது தொண்டையில் இருந்து தொங்கும் சதை மடிப்பு,” என்றது குருவி.

“அப்படியானால், நீ ஒரு மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி.





இது உன்னுடைய முட்டைகள்!” என ஆச்சரியத்தோடு சொன்னேன்.

“நீ சொன்னது சரிதான். எங்களுக்கும் சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவிகளுக்கும் இருக்கும் வித்தியாசத்தை நீ கவனித்து இருப்பது மகிழ்ச்சிதான். அளவில் நாங்கள் சிறியதாய் இருப்போம். நீ பார்த்தாய் அல்லவா? எங்களின் முட்டைகள் பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும் அவை வித்தியாசமானவை!” என்று மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி தொகுத்துச் சொன்னது.

“நீங்கள் ஏன் கூடு கட்டுவதில்லை? கூடு கட்டினால் உங்களின் முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் பாதுகாப்பாக இருக்குமல்லவா?” என்று கேட்டேன்.

“இப்போதுதான் உன்னை ‘ஷெர்லாக் ஹோம்ஸ்’ என நினைத்து ஆச்சரியம் அடைந்தேன். ஆனால் நீ ‘வாட்சன்’ ஆக இருக்கிறாயே!” என அக்குருவி ஏமாற்றத்துடன் சொன்னது. “நீ பார்கிறாயே தவிர உற்றுநோக்கவில்லை.”

குருவி சொன்னதைப் பற்றி கவலைப்படாமல் அங்கேயே நின்றிருந்தேன். வட்டம் அடித்துவிட்டு என் அருகில் அழகாகத் தரை இறங்கிய அக்குருவி உத்தரவிட்டது, “மீண்டும் என் முட்டைகளைப் பார். அவற்றைச் சுற்றி என்ன இருக்கிறது?”

அந்தக் குருவி, எதைப் பார்க்கச் சொன்னது என்று தெரியவில்லை.

“நான் அங்கே பார்ப்பது... கற்கள், குச்சிகள்... கற்கள் தான்





நிறைய இருக்கின்றன. அவை அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா?” என்று குருவியைப் பார்த்துக் கேட்டேன்.

“நீ சொல்வது எல்லாம் சரிதான். அங்கே நீ பார்ப்பது எங்களின் கூடுதான். நாங்கள் அது போலத்தான் கூடுகளை அமைப்போம். வேறு சில குருவிகளும் எங்களைப் போலவே கூடுகளை அமைக்கும். நீ ஏற்கனவே சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவியின் கூட்டைப் பார்த்து இருக்கிறாய் அல்லவா?” என்றது மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி.

குருவி சொன்னதைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. “என்ன? கூடா... அதைக் கூடு என்றா சொல்வீர்கள்!” என்று கேட்டேன்.


“ஓ!மரத்தில் கட்டினால் மட்டுமே கூடு என்று நீ நினைக்கிறாயா?

கூடு என்றால் என்ன என நீ நினைக்கிறாய்?” எனக் குருவி கேட்டது.

“கூடு என்பது... சந்தேகமில்லாமல், முட்டைகளையும் குஞ்சுகளையும் தாங்கி இருப்பதுதான். எங்களின் கூடு முட்டைகளை எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி பாதுகாப்பாக அமைக்கப்பட்டு இருக்கும். ஏன், நீ கூட ஏமாந்து போனாய் அல்லவா?” என்றது அக்குருவி.

பின்னர், மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி தங்களின் கூடுகளை அமைக்கும் முறை பற்றி விளக்கியது.

அவை முதலில், கூட்டை அமைக்கும் இடத்தைக் கவனமாகத் தேர்ந்தெடுக்கும். பின், தங்களின் உடலால் சுரண்டித் தேய்த்து ஆழம் அதிகமில்லாத ஒரு பள்ளத்தை உருவாக்கும். அடுத்து





கற்கள், மண்ணாங்கட்டிகள், குச்சிகள், புற்கள்; சூழ்நிலைக்கு ஏற்ற எதையும் அந்தப் பள்ளத்தைச் சுற்றி அடுக்கும். அவ்விடம் இயற்கையாகவே அந்தக் கூட்டின் உரு மறைப்புக்கு உதவும் வகையில் இருக்க வேண்டும்.

“எங்களின் முட்டைகள் பளபளப்பாக இருக்காது. அவை அதனைச் சுற்றி இருக்கும் கற்களைப் போலவே இருக்கும்,” என்றது மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி.

இரண்டு ஜோடி முட்டைகளைப் பார்த்தேன் என்றாலும், இக்குருவிகள் வேண்டுமென்றே கற்களையும் குச்சிகளையும் அடுக்கி கூட்டை உருவாக்கியது போல எனக்குத் தோன்றவில்லை.

எப்படியோ, கூடு எனக்குப் பிடிக்கவில்லை. “உங்கள் கூடு


ஒருவேளை முட்டைகளை உரு மறைப்பு செய்ய முக்கியமானதாக இருக்கலாம். ஆனால், முட்டைகள் பொரிந்தால் என்ன ஆகும்? குஞ்சுகள் எங்கே இருக்கும்?” என்று கேட்டேன்.

“முட்டைகள் பொரிந்த பின் எங்களுக்குக் கூடு தேவையில்லை,” என்று உறுதியாகச் சொல்லி பறந்து சென்றது மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி.

***

*இக்கதை கடந்த 2010 ஆம் ஆண்டு, ஏப்ரல் முதல் ஜூலை வரை, தெற்கு தில்லியின் எல்லையிலுள்ள காட்டின் ஒரு பகுதியான சஞ்சய் வனத்திலும் அதைச்சுற்றி இருக்கும் கல்வி வளாகத்தின் சுற்றுப்புறத்திலும் உற்றுநோக்கியதன் அடிப்படையில் உருவானது. முக்குளிப்பான்கள், தையற்சிட்டுகள் ஆகியன நீண்ட இனப்பெருக்க காலத்தை உடையவை.*

*இப்புத்தகத்திலுள்ள புகைப்படங்கள் பறவைகள், கூடுகளின் உண்மையான அளவைக் குறிக்காது.*





மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவி



மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக் குருவியின் கூடு



புற்களின் நடுவிலுள்ள மஞ்சள் மூக்கு ஆள்காட்டிக்

குருவியின் கூடு



முட்டைகளை அடைகாக்கும் மஞ்சள் மூக்கு

ஆள்காட்டிக் குருவி



சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவி



சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவியின் கூடு



புற்களின் நடுவிலுள்ள சிவப்பு மூக்கு ஆள்காட்டிக் குருவியின் கூடு



முட்டைகளை அடைகாக்கும் சிவப்பு மூக்கு

ஆள்காட்டிக் குருவி

முட்டைகளின் மர்மம் published by VIDYA ONLINE is licensed under
a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported License
(http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/)
Permissions beyond the scope of this license may be
available at admin@vidyaonline.org

http://vidyaonline.net